(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 33 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, ஒற்றோபர் 24, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0064/ ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹின் விமானச் சேவையினால் விமானப் பணியாளர் இன்றியும், விமானப் பணியாளர்களுடனும் வாடகைக்கமர்த்தப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) விலை மனுக்கோரல் நடைமுறை மூலமாகவா இவை தெரிவு செய்யப்பட்டன என்பதையும்,

(iii) ஆம் எனில், விலை மனுக்கோரலை சமர்ப்பித்திருந்த கம்பனிகளது பெயர்களையும், தெரிவு நடைமுறைகளையும்,

(iv) இதனைத் தீர்மானித்த நபர் யார் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) விமானப் பணியாளர் இன்றியும், விமானப் பணியாளர்களுடனும் என்ற அடிப்படையில் வாடகைக்கமர்த்தப்பட்ட பொழுது மாதாந்தம் அறவிடப்பட்ட கட்டணம் எவ்வளவு என்பதையும்,

(ii) இது தொடர்பில் நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றனவா என்பதையும்,

(iii) கணக்காய்வாளர்களினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இறுதித் தெரிவுக்கான குழுவையும் அதன் விதப்புரைகளையும்,

(iv) இங்கு பணியாற்றுகின்ற பணியாட்டொகுதி உறுப்பினர்களது எண்ணிக்கையையும்,

(v) அவர்களது சம்பள அளவுத்திட்டம் அதனால் கம்பனிக்கு ஏற்படுகின்ற தாக்கம் என்னவென்பதை மாதாந்த அடிப்படையிலும்,

(vi) மிஹின் விமானச் சேவையின் இன்றுவரையிலான கணக்குகளையும்,

(vii) அரசாங்கத்திடமிருந்து மிஹின் விமானச் சேவைக்கு மாற்றப்பட்ட பணம், அவ்வாறு மாற்றிய திகதி ஆகியவற்றையும்,

(viii) எந்த தலைப்பிலிருந்து பணம் மாற்றப்பட்டது என்பதையும், பாராளுமன்றம் ஒப்புதல் அளித்த திகதியையும்,

(ix) ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் மிஹின் எயார் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்ட செலவுத்தலைப்புகளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) மிஹின் எயார் லிமிட்டெட்டின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட, திறைசேரி மற்றும் மிஹின் எயார் பிரதான அதிகாரிகளது பெயர்கள் என்னவென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) பணம் சட்ட ரீதியாக ஒதுக்கப்படவில்லை என்பதையும், எனவே சகல அதிகாரிகளும் பொது நிதியை பிழையாக பயன்படுத்தி குற்றத்திற்கு ஆளாவார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0095/ ' 08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டின் போக்குவரத்துத்துறையை விருத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கம் கடனுதவித் திட்டமொன்றை வழங்கியுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அதன் அளவையும் திகதியையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்தியாவிலுள்ள "ரைட்ஸ் லிமிரெட்" நிறுவனத்தால் புகையிரதத் திணைக்களத்திற்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவித்திட்ட மொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வுதவி பெற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதா அல்லது பேச்சுவார்த்தை நடை பெறுகின்றதா என்பதையும்,

(iii) உள்ளூர் முகவர்களின் பெயர்களையும்,

(iv) இவ்வுதவி குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு 2 வருடங்கள் எடுப்பதற்கான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0096/ ' 08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு டிசெம்பரில் மேதகு சனாதிபதி அவர்கள் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்திற்கான மொத்த செலவு எவ்வளவு என்பதையும்,

(ii) இவருடன் சென்ற நபர்களது எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) இதனால் நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்,

(iv) அவர்களது பெயர்களையும் கிடைத்த பயனின் அளவு என்னவென்பதையும்,

(v) இற்றைவரை கிடைத்த பயன்களின் அளவையும்,

(vi) கிடைக்கவுள்ள நன்மைகளையும் அதற்கான திகதிகளையும்,

(vii) இப்பயன்கள் எந்தத்துறை சார்ந்தவை என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்கு பிரதிபலனாக ஜப்பானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0168 / ' 08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மீள்குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுகேகொட ஆடைகள் விற்பனை நிலையமொன்றுக்கு முன்னிலையில் வெடித்த குண்டின் காரணமாக செல்வி. யூ. டீ. மஹிங்சா பிரதீபனி மரணமடைந்தார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 14/1, ஹில்கிரஸ்ட் தோட்டம், நிவுன்கம, பிலியந்தலையில் வசிக்கும் இவரது பெற்றோருக்கு நட்டஈடாக ரூபா. 25,000 மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) குண்டுவெடிப்பின் காரணமாக மரணமடைந்தவர்களது குடும்பங்களுக்கு ரூபா ஒரு லட்சம் வழங்கப்படும் என ஊடகங்களின் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டதென்பதையும்,

(iii) ஆயினும், மரணமடைந்த 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட தொகை ரூபா. 25,000 க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், உண்மையான நட்டஈடு செலுத்துதலுக்கும் பிரச்சாரத்திற்கும் இடையே வித்தியாசமுள்ளதென்பதையும்,

(iv) குண்டு வெடிப்பின் காரணமாக பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் இதனால் அசௌகரியங்களுக்கு உள்ளாவார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி பெற்றோருக்கு பிரச்சாரம் செய்யப்பட்டவாறு நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0169 / ' 08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயணப்பாதை இலக்கம் 255 கொட்டாவ—கல்கிஸ்ஸ மற்றும் பயணப்பாதை இலக்கம் 158 பிலியந்தல—மொரட்டுவ வீதிகளை அகலமாக்கி அபிவிருத்தி செய்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்,

(ii) பல ஆண்டுகளாக அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் கைவிடப் பட்டுள்ளன என்பதையும்,

(iii) இந்நிலைமை வாகனப் போக்குவரத்துக்குத் தடையாகவும் விபத்துக்களுக்குக் காரணமாகவும் அமைகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் எப்போது இடைநடுவில் கைவிடப்பட்டன,

(ii) அவ்வாறு செய்தமைக்கான காரணங்கள் யாவை,

(iii) இவ்வீதிகளை மீண்டும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா

(iv) ஆமெனில், எப்போது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0213/ ' 08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக சேவைகள், சமூக நலனோம்புகை (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0214/ ' 08

7.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி, சட்ட மறுசீரமைப்பு (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0215/ ' 08

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— துணைப்பயிர் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) துணைப்பயிர் அபிவிருத்தி (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0487/ ' 08

9.

கௌரவ விஜித ரணவீர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவையில் இல்லா அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எத்தனைபேருக்கு வாடகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக்கொள்ள மாதாந்தம் ரூபா ஒரு இலட்சம் (ரூபா. 100,000) கொடுப்பனவு வழங்கப்படுகின்றது,

(ii) மேற்படி கொடுப்பனவு வழங்கப்படுகின்ற அமைச்சர்களின் பெயர் மற்றும் பதவிகள் (அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவையில் இல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள்) முறையே யாவை,

(iii) முதல் தடவையாக வாடகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் அமைச்சர்களுக்கு எப்போதிருந்து வழங்கப் பட்டன

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2004.06.01 ஆம் திகதியில் இருந்து 2007.12.31 ஆம் திகதி வரை அமைச்சர்களுக்கு வாடகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0539/ ' 08

10.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பாவனைக்கு உதவாத பொருட்களை கொள்வனவு செய்வதற்கென பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்கள் குழுவொன்று இருக்கின்றதா,

(ii) இவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களுக்கு புறம்பாக வேறு நபர்களுக்கு பாவனைக்கு உதவாத பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதா,

(iii) 2007 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களுக்கு பாவனைக்கு உதவாத பொருட்கள் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது.

(iv) 2007 ஆம் ஆண்டு பதிவு செய்யப்படாத கொள்வனவாளர்களுக்கு பாவனைக்கு உதவாத பொருட்கள் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது.

(v) 2007 ஆம் ஆண்டில் பாவனைக்கு உதவாத 1000 கிலோகிராமுக்கு அதிகாமான பலவித பொருட்கள் ஒரே தடவையில் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளனவா,

(vi) அவ்வாறாயின், அது யாருக்கு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0545/ ' 08

11.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 ஆவது வாசகத்தின் கீழான விதப்புரையின்படி, மைக்றோன் 20 அல்லது அதைவிட குறைந்த கனமுடைய பொலித்தீனை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பாவனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1466/5 ஆம் இலக்க 2006.10.10 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் தடைசெய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) எனினும், இன்னும் பழைய முறையில் பொலித்தீன் உற்பத்தி செய்து சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு பாவிக்கப்படுகிறது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி சட்டத்தை செயல்படுத்த தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0650/ ' 08

12.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விவசாயிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் என்ற வகையில் நடத்தப்பட்ட “தேசிய கமக்காரர்கள் சந்தை” மற்றும் கண்காட்சி ஆகியவற்றின் தன்மை யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அத்தேசிய கமக்காரர்கள் சந்தையும் கண்காட்சியும் நடத்தப்பட்ட இடம் யாது,

(ii) ஒவ்வொரு கமக்காரர்கள் சந்தையையும் கண்காட்சியையும் நடத்துவதற்குச் செலவான பணம் எவ்வளவு,

(iii) ஒவ்வொரு கமக்காரர்கள் சந்தை மற்றும் கண்காட்சி ஆகியவற்றின் மூலம் கிடைத்த இலாபம் அல்லது அடைந்த நட்டம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட சந்தை மற்றும் கண்காட்சி ஆகியவற்றோடு இணைந்ததாக “கொவிஜன வாசனா” என்ற பெயரில் லொத்தர் சீட்டொன்று அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதா,

(ii) அந்த லொத்தர் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு,

(iii) அந்த லொத்தர் மூலம் வழங்கப்படுகின்ற பரிசுகளின் பெறுமதி வெற்றிபெற்ற இடங்களின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவு,

(iv) இப்பரிசுப் பொருட்கள் அல்லது பரிசுப் பணம் சம்பந்தப்பட்ட வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா,

(v) இன்றேல், அப்பரிசுப் பொருட்களை அல்லது பரிசுப் பணத்தை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0680/ ' 08

13.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்காக, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக சில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்ப வர்களின் பெயர் முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்கு வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0681/ ' 08

14.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்காக, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக சில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்ப வர்களின் பெயர் முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்கு வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0682/ ' 08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் ஆராச்சிக்கட்டுவப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2008 நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 08 ஆம் திகதி சனிக்கிழமை, 10 ஆம் திகதி திங்கட்கிழமை, 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 13 ஆம் திகதி வியாழக்கிழமை, 14 ஆம் திகதி வெளளிக்கிழமை, 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்கள் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகும்.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009)" ஐ பரிசீலிப்பதற்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2008 நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையிலான நாட்களில் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணிவரை இருக்குமாக. ந.ப. 12.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

4.

கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை)யைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

மோட்டார் வாகன (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — இரண்டாம் மதிப்பீடு.

*3.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*7.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*8.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்**

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.பெறப்

(அமைச்சரவையின் அங்கீகாரம் பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் 30 ஆந் திகதிய 1547/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஓகத்து 26 ஆந் திகதிய 1564/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடனும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும்

சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோள்களின்பேரில் இலத்திரனியல் நிதிக் கைமாற்றுதல் ஒவ்வொன்றையும் நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடப்பட வேண்டிய நிதித் தொகையின் குறைந்த எல்லை விதிக்கப்பட்டு சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஜூன் 25 ஆந் திகதிய 1555/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின்

பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

33.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.